# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.54/2022

## அ.சா.13 (LW 10)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பிரசன்னகுமார் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | தங்கதுரை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **03.04.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.

2ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவில் இளநிலை உள்தங்கு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.06.2021ம் தேதி மாலை 5.15 மணியளவில் திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது, கருப்பையா, வயது 38, த/பெ.அழகுமணி, அச்சராஜக்காபட்டி, தோட்டனூத்து அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம் என்பவரை அவரது மாமா கோபி என்பவரால் இறந்த நிலையில் பிரேதமாக எடுத்து வரப்பட்டார். அவருக்கு விபத்து பதிவு செய்து பிரேத பரிசோதனைக்காக பிணவறையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.9** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

அதே நாள் நான் திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது மாலை 5.25 மணியளவில் கங்காதரன், வயது 28, த/பெ.மணிவேல், வடக்கு மாலைபட்டி, தோட்டனூத்து அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் அவரது உறவினர் பொன்னாண்டவர் என்பவரால் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 14.06.2021ம் தேதி மாலை 5.00 மணியளவில் மாலைபட்டி பிரிவில் தாக்கியதாக தெரிவித்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் இடது தோள்பட்டை பகுதியில் 5x2x2 செ.மீ அளவில் சிதைவு காயம். அவருக்கு விபத்து பதிவு செய்து முதலுதவி சிகிச்சைகள் அளித்து

உள்நோயாளியாக அனுமதித்தேன். மேலும் அவருக்கு எடுக்கப்பட்ட X–ray அடிப்படையிலும், அவருக்கு சிகிச்சை அளித்த சிறப்பு மருத்துவரின் கூற்றுப்படியும் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்துள்ளேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.10** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய காயச்சான்றிதழ் **அ.சா.அ.11** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யவில்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.04.03 14:44:53 +0530

Additional District Judge,

Dindigul.